அனுப்புநர்

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

உதவி இயக்குநர்,
அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி
இயக்குநர் அலுவலகம்.

ந.க.எண். 012964 /கே /2021

நாள் :16 .03.2022

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– மே–2022, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – முதன்மை விடைத்தாட்கள், கூடுதல் விடைத்தாட்கள் மற்றும் ஏனைய எழுதுபொருட்கள் அனைத்து தேர்வு மையங்களுக்கும் விநியோகித்தல் – தொடர்பாக.

பார்வை : சென்னை–6, அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் கடிதம் ந.க.எண்.012964/கே/2021, நாள். 26.11.2021

*******

அரசு மைய அச்சகத்திலிருந்து நடைபெறவுள்ள மே 2022 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வுக்கு பெறப்பட்ட எழுதுபொருட்கள் இவ்வலுவலக அறிவுரைகளின்படி தங்கள் ஆளுகைக்குட்பட்ட ஒருங்கிணைப்பு மையத்தில் ஏற்கெனவே பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும். (முதன்மை விடைத்தாட்கள், கூடுதல் விடைத்தாட்கள், வரைபடங்கள், வரைகட்டத்தாட்கள், அகல துணி வேய்ந்த காகித உறைகள் மற்றும் பிற இனங்கள் உட்பட) தற்போது தலைமை அலுவலகத்திலிருந்து அனுப்பிவைக்கப்படும் முகப்புதாட்கள் வழங்கப்பட வேண்டிய தேதி தெரிவிக்கப்படும் போது தங்கள் ஆளுகைக்குட்பட்ட தேர்வு மையங்களுக்கு முதன்மை, கூடுதல் விடைத்தாட்கள் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் இதில் காலதாமதம் ஏற்படக்கூடாது.

<u>முக்கிய குறிப்பு</u>

உதவி இயக்குநர்கள் மேல்நிலை இரண்டாமாண்டு, முதலாமாண்டு Accountancy பாடத்திற்கான முதன்மை விடைத்தாளில் கீழ்க்கண்டுள்ளவாறு

**Question Booklet Series**
**(Tick The Appropriate Box)**

| | |
|---|---|
| A | |
| B | |

என முத்திரையிட்டு தேர்வு மையங்களுக்கு வழங்க வேண்டும். மேற்படி இரப்பர் முத்திரையினை செய்து, தேர்வு மையங்களுக்கு எழுதுபொருட்கள் வழங்கும் போது Accountancy பாடத்திற்கான விடைத்தாளில் வலது பக்கத்தில் முத்திரையிட்டு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

..2..

எழுதுபொருட்கள் / முகப்பு தாட்கள் அனைத்து தேர்வு மையங்களுக்கும் மேற்படி தினங்களுக்குள் ஒப்படைத்தவுடன் ksectiondge@gmail.com என்ற மின்னஞ்சல் தெரிவிக்குமாறு உதவி இயக்குநர்களுக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தேர்வு மையங்களுக்கான எழுது பொருட்களை சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் அல்லது உதவி தலைமையாசிரியர் நேரில் வந்து பெற்றுச் செல்லுமாறு சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு அறிவுறுத்திட அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர் / அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அனைத்து தேர்வு மைய பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதன்மைக் கண்காணிப்பாளர்கள் கீழ்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை கண்டிப்பாக பின்பற்றிடவும் அறிவுறுத்துமாறு அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. விடைத்தாள் பக்கங்கள் பள்ளித் தலைமையாசிரியரால் சரிபார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. தேர்வு மைய பள்ளித் தலைமை ஆசிரியர்கள் விடைத்தாட்களை பெற்ற பின்பு, அதற்கான பதிவேட்டில் பாடவாரியாக பதிந்து பாதுகாப்பாக பராமரிக்க அறிவுறுத்த வேண்டும்.
3. விடைத்தாட்கள் பெறும் பள்ளித் தலைமையாசிரியர், தேர்வு மையத்திற்கு வரும் தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களிடம் விடைத்தாட்களை கணக்கிட்டு பதிவேட்டில் பதிந்த பின்னர், முதன்மைக் கண்காணிப்பாளரின் கையொப்பம் பெற்றுக் கொண்டு ஒப்படைத்தல் வேண்டும்.
4. அனைத்து தேர்வுகளும் முடிந்தவுடன் தேர்வுக்குப் பயன்படுத்தியது போக மீதமுள்ள விடைத்தாட்களை பாடவாரியாக (முதன்மை / கூடுதல் விடைத்தாட்கள்) கணக்கிட்டு தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர் சம்பந்தப்பட்ட தேர்வு மைய பள்ளித் தலைமை ஆசிரியரிடம் ஒப்படைத்து அதற்கான ஒப்புகையைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். மீதம் பெறப்பட்ட அனைத்து வகையான விடைத்தாட்களின் எண்ணிக்கையும் பதிவேட்டில் பள்ளித் தலைமை ஆசிரியர் பதிந்திடல் வேண்டும் எனவும் தெரிவித்தல் வேண்டும்.
5. தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வுக்கு பாட வாரியாக முதன்மை / கூடுதல் விடைத்தாட்கள் போதுமான எண்ணிக்கையில் பெற்றுக் கொண்டோமா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

6. போதுமான எண்ணிக்கையில் எழுது பொருட்கள் தங்கள் தேர்வு மையங்களுக்கு பெறப்பட்டதை உறுதி செய்து பின்னர், பள்ளி தலைமை ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் / அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநருக்கு இதுகுறித்து தெரிவித்திட வேண்டும்.

மேலும், ஒவ்வொரு ஒருங்கிணைப்பு மையங்களிலுள்ள எழுதுபொருட்களின் விவரங்களை பட்டியலிட்டு பதிவேட்டில் பதிந்துக் கொண்டு அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் தங்களின் மாவட்டத்திற்குட்பட்ட ஒருங்கிணைப்பு மையங்களில் எழுதுபொருட்களை விநியோகம் செய்ய வேண்டும்.

மேலும், வரிசை எண் 1 முதல் 6 உள்ள விவரங்களை சம்பந்தப்பட்ட தேர்வு மைய பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் முதன்மை கண்காணிப்பாளர்களுக்கு கடிதம் மூலமாக தெரிவிக்குமாறும் உதவி இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்

நகல்.

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

} தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைகாகவும்

# இணைப்பு

**விடைத்தாள் வகை வாரியான பக்கங்கள் ( HSE +2 )**
**எண்ணிக்கை விவரப் பட்டியல் :-**

| SCRIPT CATEGORY | NO. OF PAGES | TYPE |
|---|---|---|
| | HSE +2 | |
| HSE (+2) -LANGUAGE | 30 | RULED / DOTTED |
| HSE (+2) -BIO BOTANY | 14 | UNRULED |
| Addl.Sheet (Unruled) | 04 | UNRULED |
| HSE (+2)-BIO ZOOLOGY<br>• Stitched together | 14 | |
| HSE (+2) – ACCOUNTANCY | 30 | 1-14 UNRULED<br>15-30Account Sheets |
| HSE (+2) (OTHERS) | 30 | UNRULED |